# அன்புள்ள ஆசிரியருக்கு...

## ஏழைகள் மேம்பாடு

புதிய கோவில்களைக் கட்டுவதைத் தவிர்த்து பழைமையான கோவில்களைப் புதுப்பித்து அவற்றில் வழிபாடுகள் சரிவர நடத்துமாறு மக்களைப் பணித்துள்ள காஞ்சி ஸ்ரீ ஆசார்யர்களின் கருத்து (4.2.99) வரவேற்று கடைப்பிடிக்கப் பட வேண்டிய ஒன்று. இறைவன் ஒருவன்தான். அப்பேராற்றலைத் தான் நாம் யாவரும் பல பெயர்களில் அழைத்துப் போற்றி வருகிறோம். அப்படி இருக்கையில் அந்த இறைவன் எந்த மார்க்கம் உகந்தது என்று உணர்ந்து நமக்களித்த ஒன்றை மாற்றத் தேவையில்லை. இதுகுறித்த கருத்துப் பரிமாற்றம் வரவேற்கத்தக்கதே. இக்காலகட்டத்தின் உயரிய, செயல் யாதெனில் ஹிந்து மதத் தலைவர்களும் அமைப்புகளும் ஒரு பேரவையின் கீழ் ஒன்று சேரவேண்டும். ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கல்வி பொருளாதார மேம்பாட்டையும் பாகுபாடின்றிப் பேண முன்வர வேண்டும்.

**என். ஹரிஹர சுப்ரமணியன்,**
சென்னை-30.

தினமணி
நாள்: 17.02.99